# <u>பட்டுக்கோட்டை நகராட்சி</u>

**ஸ்ரீ சார்வரி வருடம் ஆடி மாதம் 16–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு ஆகஸ்டு 31–ம் தேதி) திங்கள் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சுப்பையா,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**<u>பொருள் எண்..1</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி UPHC – NUHM திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் கூடுதல் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினமணி நாளிதழில் **18.07.2020** அன்று பிரசுரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ.**4183/–** (பில் எண்.TRITN 50060723 , Date : 18.07.2020) எக்ஸ்பிரஸ் பப்ளிகேஷன்ஸ் (மதுரை) பிரைவேட் லிமிடெட் , நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | **1)** மன்றம் அனுமதிக்கலாம். |
| | **2)** ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது **18.07.2020** அன்று பிரசுரம் செய்யப்பட்டமையால் மேற்படி நிறுவனத்தாருக்கு பட்டியல் தொகை வழங்க ஏதுவாக தனி அலுவலர் அவர்களது முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.**5160/2018**/இ.**1**) |

**தீர்மானஎண்.. 525 … அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது …**

**<u>பொருள் எண்..2</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் **50–ம்** ஆண்டு பொன்விழாவினை முன்னிட்டு காசாங்குளத்தை சுற்றி நான்கு கரைகளிலும் பொது மக்கள் நடை பயிற்சி செய்வதற்கு ஏதுவாக நடைபாதை அமைக்க நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணி ரூ.**50.00**இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற இருந்தது. அப்பொழுது காசாங்குளம் தென்கரையில் நடைபாதை அமைக்கும் இடத்தில் இடையூறாக தனியரால் அமைக்கப்பட்டு திரு.வி.விஸ்வநாதன் அவர்களால் பராமரிக்கப்பட்டு வரும் **“ராமர் மடம்“** கட்டிடம் இடையூறாக அமைந்துள்ளது என நகராட்சி பொறியாளர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் மேற்படி விபரம் ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி, ராமர் மடத்தின் பராமரிப்பாளர் திரு.வி.விஸ்வநாதன், பட்டுக்கோட்டை அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்பு கட்டிடத்தினை அகற்றுமாறு நகராட்சி மூலம் அறிவிப்பு கடிதம் அனுப்பப்பட்டது.

மேற்படி அறிவிப்பு கடிதம் பெற்றுக்கொண்ட பராமரிப்பாளர் திரு.வி.விஸ்வநாதன் என்பவர் சார்பு நீதி மன்றம், பட்டுக்கோட்டையில் வழக்கு எண்..ஒ.எஸ்.எண்..**199/2014–**ல் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கு தற்போது நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு ஒ.எஸ்.எண்..199/2014–ல் நகராட்சி ஆணையர் சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.டி.தேவக்குமார் அவர்கள் ஆஜராகி மேற்படி வழக்கு தள்ளுபடி செய்த ஆவணங்களுடன் சமர்ப்பித்துள்ளார். மேலும் மேற்படி வழக்கு கட்டணமாக ரூ.5000/–மும், Statement Preparation Charge ரூ.300/–ம், CF on Vakkalat ரூ10/–ம், ஆக கூடுதல் தொகை ரூ.5,310/–ம் வழங்குமாறு கடிதம் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகை ரூ.5,310/– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..7773/2014/எப்1) |

**தீர்மானஎண்.. 526 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..3</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் உருவாகி அதனால் பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு (DBC) பணிகள் மேற்கொள்ள துப்புரவு கோட்டம் 1,2,3க்கும் சேர்த்து 60 நபர்கள் அமர்த்திக்கொண்டு (01.09.2020 முதல் 31.10.2020 முடிய) உள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணிகளை மகளிர் சுய உதவிக்குழுக்கான கோட்டம்–1க்கு சமத்துவ மகளிர் சுய உதவிக்குழு, ஆனைவிழுந்தான் குளத் தெரு, பட்டுக்கோட்டை கோட்டம்–2–க்கு அதிர்ஷ்ட லெட்சுமி மகளிர் சுய உதவிக்குழு, வெண்டாக்கோட்டை ரோடு, வளவன்புரம், பட்டுக்கோட்டை கோட்டம்–3–க்கு அம்மன் சுய உதவிக்குழு, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்..4032/2019/எச்1) |

**தீர்மானஎண்.. 527 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..4</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சம்மந்தமான பதிவுகளானது புதிய இணையதளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவரும் பணிக்கு நகர்மன்றம் தீர்மான எண்..36, நாள்.. 30.03.2017 நகர்மன்ற அனுமதி வழங்கிய உரிம காலம் 28.02.2018 உடன் முடிவடைவதால், இப்பணியை மேலும் ஓராண்டிற்கு

மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்..369, நாள்.. 28.3.2018 வரை அனுமதி வழங்கிய உரிம காலம் 31.3.2019 உடன் முடிவடைவதால், இப்பணியினை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும்பொருட்டு நகர்மன்ற தீர்மானஎண்..60, நாள்.. 31.05.2019ன்படி அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.03.2020உடன் முடிவடைவதால், மேலும் நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..432, நாள்.. 30.03.2020ன்படி, 1.4.2020 முதல் 30.06.2020 வரை அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.06.2020 உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..478, நாள்.. 30.06.2020–ன்படி இப்பணிக்கான உரிமக் காலத்தினை 01.07.2020 முதல் 31.08.2020 வரை 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்தது முடிவடைந்ததால், மேலும் 01.09.2020 முதல் 31.10.2020 வரை 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 31.08.2020 உடன் நிறைவடைவதால் 01.09.2020 முதல் 31.10.2020 வரை இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–21–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும், பொது மக்கள் நலன் கருதி பிறப்பு இறப்பு சான்றுகளை கணினியில் பதிவேற்றம் செய்து உடன் சான்று வழங்க ஏதுவாக இப்பணியின் முக்கியத்துவம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம்<br><br>மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br><br>(ந.க.எண்..839/16/எச்1) |

**தீர்மானஎண்.. 528 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>**பொருள் எண்..5**</u>

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் அன்றாட துப்புரவுப்பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 94 நபர்கள் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைவதாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர். தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின் தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம்

31.5.2018 உடன் முடிவடைவதால் அன்றாட பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி 1.6.2018 முதல் 31.7.2018 வரை கூடுதலாக இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றத் தீர்மான எண்..430, நாள்.. 29.5.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக் காலம் 31.7.2018உடன் முடிவடையும் பொருட்டு பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.8.2018 முதல் 30.09.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் உரிம காலம் 30.9.2018 உடன் முடிவடைவதன்பொருட்டு மேலும் கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.10.2018 முதல் 30.11.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண்..502, நாள்.. 20.9.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 30.11.2018 உடன் முடிவடைய உள்ளதன் பொருட்டு கூடுதலாக 2 மாதத்திற்கு 1.12.2018 முதல் 31.01.2019 வரை அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்..560, நாள்.30.11.2018ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.1.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு கூடுதலாக 5 மாதத்திற்கு 1.4.2019 முதல் 31.8.2019வரை மட்டும் உரிமத்தினை நீட்டிப்பு செய்தும், அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்.73, நாள்.31.05.2019ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.8.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.312, நாள்.13.11.2019ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.09.2019 முதல் 31.12.2019வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.12.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.419, நாள்..25.02.2020–ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.01.2020 முதல் 30.04.2020வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.04.2020உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, மேலும் கூடுதலாக நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..443, நாள்.. 30.04.2020–ன்படி 01.05.2020 முதல் 30.06.2020வரை 2 மாதத்திற்கு நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.06.2020 உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..479, நாள்.. 0.06.2020–ன்படி 01.07.2020 முதல் 31.08.2020வரை 2 மாதத்திற்கு நீட்டிப்பு செய்தது முடிவடைந்ததால், மேலும் 01.09.2020 முதல் 31.10.2020வரை இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.09.2020 முதல் 31.10.2020வரை வரை 2 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்திடவும், 2020–2021 –க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அன்றாட பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 4) உத்தேச செலவு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7150/2015/எச்1) |

**தீர்மானஎண்.. 529 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

பொருள் எண்.. 6

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் JCB மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு 1 ஓட்டுநர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகித அடிப்படையில் விவேகானந்தா தொண்டு நிறுவனம், பட்டுக்கோட்டை அவர்கள் மூலம் பெற்று ஓட்டுநர் பணிபுரிந்திட நகர்மன்றம் தீர்மான எண்..122, நாள்.. 10.06.2016ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திட புதுப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உரிமத்தினை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தீர்மான எண்..144, நாள்.. 19.06.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக்காலம் 31.03.2019உடன் முடிவடைவதால், இப்பணிக்கான உரிமக் காலத்தினை நகர்மன்றம் தீர்மான எண்..74, நாள்.. 31.05.2019ன்படி 1.4.2019 முதல் 31.3.2020 முடிய ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்தது 31.03.2020உடன் முடிவடைவதால், நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..431, நாள்..30.03.2020–ன்படி இப்பணியின் உரிமக்காலம் 01.04.2020 முதல் 30.06.2020 முடிய நீட்டிப்பு செய்தது 30.06.2020 உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..480, நாள்.. 30.06.2020–ன்படி, உரிமக்காலம் 01.07.2020 முதல் 31.08.2020 வரை 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்தது முடிவடைந்ததால், பொது சுகாதாரப் பணியின் அவசர, அவசியங் கருதி 01.09.2020 முதல் 31.10.2020 முடிய மேலும் 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்துகொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 31.08.2020 உடன் நிறைவடைவதால் 01.09.2020 முதல் 31.10.2020 முடிய மேலும் இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–21–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும்,அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை அத்தியாவசியம் கருதி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..6517/14/எச்1) |

**தீர்மானஎண்.. 530 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 7</u>**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு இந்நகராட்சியால் செலுத்தப்பட வேண்டிய 2020–2021–ஆம் ஆண்டிற்கான ஆண்டு சந்தா தொகை ரூ.90,000/–ஐ செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்..5940/2013/சி1)

**தீர்மானஎண்.. 531... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 8</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் நிர்வாக அலுவலர் வளாகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9025/2020/இ.3 நாள்.16.07.2020–ன் படி , TURIP–2020–21 திட்டத்தின்கீழ் பட்டுக்கோட்டை நகராட்சியில் சாலைபணிகள் மேற்கொள்வதற்கு ரூ.244.00 இலட்சத்திற்கு (தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ.183.00 இலட்சம், நகராட்சி பங்களிப்பு ரூ.61.00 இலட்சம் ) நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள 20.08.2020 அன்று இரண்டு சிப்பங்களாக கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

சிப்பம் எண்.1 பட்டுக்கோட்டை நகரில் வார்டு எண்.27 பாரதி சாலை, வார்டு.30 பசும்பொன் நகர் மற்றும் சிவக்கொல்லை ஆற்றுக்கரை சாலை, வார்டு.29 என்ஜிஜி.ஓ காலனி மற்றும் வசந்தம் நகர், வார்டு.31 அய்யா நகர் ஆகிய சாலைகளுக்கு பேவர் இயந்திரம் பயன்படுத்தி தார்தளம் அமைத்தல் பணிக்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra, Kovilveni | மதிப்பீட்டை விட 5.50% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில், M/s MSG Infra, ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra, Kovilveni | மதிப்பீட்டை விட 4.93% அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4,93 % அதிகம் உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு,, மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3385/2020/இ.1)

**தீர்மானஎண்.. 532 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 9</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் நிர்வாக அலுவலர் வளாகம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9025/2020/இ.3 நாள்.16.07.2020–ன் படி , TURIP–2020–21 திட்டத்தின்கீழ் பட்டுக்கோட்டை நகராட்சியில் சாலைபணிகள் மேற்கொள்வதற்கு ரூ.244.00 இலட்சத்திற்கு (தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்ட மானிய நிதி ரூ.183.00 இலட்சம், நகராட்சி பங்களிப்பு ரூ.61.00 இலட்சம் ) நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் மேற்கொள்ள 20.08.2020 அன்று இரண்டு சிப்பங்களாக கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

சிப்பம் எண்.2 பட்டுக்கோட்டை நகரில் வார்டு எண்.7 மற்றும் 9 சுண்ணாம்புக்காரத்தெரு முதல் நேரு நகர் தட்டான் குளம் வரை, வார்டு எண்.10 தர்மலிங்கம் நகர், வார்டு எண்.13 சுப்பையா பிள்ளை தெரு ஆகிய சாலைகளுக்கு பேவர் இயந்திரம் பயன்படுத்தி தார்தளம் அமைத்தல் பணிக்கு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra, Kovilveni | மதிப்பீட்டை விட 5.50% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில், M/s MSG Infra, ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை

குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | M/s MSG Infra, Kovilveni | மதிப்பீட்டை விட 4.91 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள M/s MSG Infra, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.914 % அதிகம் உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி நகர்மன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.3385/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 533 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>**பொருள் எண்.. 10**</u>

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோக மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளான, காயில் ரீவைண்டிங், பம்ப் பாகங்கள் மாற்றுதல் , ஸ்டாட்டர் உபகரணங்கள் பொருத்துதல் போன்றவற்றினை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல் பணிக்கு 13.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோக மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளான, காயில் ரீவைண்டிங், பம்ப் பாகங்கள் மாற்றுதல் , ஸ்டாட்டர் உபகரணங்கள் பொருத்துதல் போன்றவற்றினை வருடாந்திர பராமரிப்பு பணி செய்தல | ரூ.9,00,000/– | பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ், பட்டுக்கோட்டை | 0.26 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 3.88% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் , ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள பாபு ரீவைண்டிங் ஒர்க்ஸ ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2)˙ செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2029/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 534 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 11</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா அறிகுறி தென்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளை கண்டறிந்து G.I sheet மூலமாக Eucalyptus Poles யை பயன்படுத்தி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக ஏற்படுத்தி தருதல் பணிக்கு 18.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா அறிகுறி தென்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகளை கண்டறிந்து G.I sheet மூலமாக Eucalyptus Poles யை பயன்படுத்தி கட்டுப்படுத்தப்பட்ட பகுதியாக ஏற்படுத்தி தருதல் | ரூ.10,00,000/- | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.16 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 1.60% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் , ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை கொரோனா நிதி அல்லது வருவாய் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) ˙ கொரோனா தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளினை ஏற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1771/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 535 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 12</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி தலைமை நீரேற்று நிலையம், மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறு மூலம் உந்து செய்யும் நீரில் குடிநீர் விநியோத்திற்கு தேவையான திரவ குளோரின் சப்ளை செய்தல் பணிக்கு 21.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | குடிநீர் விநியோகத்திற்கு தேவையான திரவ குளோரின் சப்ளைசெய்தல் பணி | ரூ.9,90,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.67 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 13.33% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் , ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2052/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 536 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்.. 13**

பட்டுக்கோட்டை நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் உள்ள ஆணையர் அலுவலக அறை பகுதியில் பொதுமக்கள் காத்திருக்கும் / வரவேற்பு அறை அமைக்கும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 31.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி அலுவலக கட்டிட வளாகத்தில் உள்ள ஆணையர் அலுவலக அறை பகுதியில் பொதுமக்கள் காத்திருக்கும் / வரவேற்பு அறை அமைக்கும் பணி | 1,35,000 | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.01 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 1.09% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை பொது நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2175/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 537 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்.. 14</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா தடுப்பு மருத்துவமனை மற்றும் பாதுகாப்பு மையத்திற்கு புதிதாக 125 KVA Generator கொள்முதல் செய்து , நிறுவி பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பணியினை மேற்கொள்ளுவதற்கு 19.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா தடுப்பு மருத்துவமனை மற்றும் பாதுகாப்பு மையத்திற்கு புதிதாக 125 KVA Generator கொள்முதல் செய்து , நிறுவி பயன்பாட்டுக்கு கொண்டு வரும் பணியினை மேற்கொள்ளுதல் | 12,15,000 | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.01 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.14% அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே கே.எடிசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) மேற்காணும் பணிக்கான செலவினத்தினை கொரோனா நிதி மற்றும் பொது நிதியின் மூலம் வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2053/2020/இ.1) |

**தீர்மானஎண்.. 538 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**ஆணையர் / தனி அலுவலர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி.**